**DEPOSITION OF WITNESS**

**UNDER CODE OF CRIMINAL PROCEDURE**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, DHARMAPURI.**

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **CC. No: 499/2025** |
| **Ranking of witness** | **:** | **PW1** |
| **Name** | **:** | **மாரம்மாள்** |
| **Husband Name** | **:** | **க/பெ கிருஷ்ணன்** |
| **Age** | **:** | **41** |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Religion** | **:** | |
| **Calling** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 05-08-2026.**

**எதிரி நீதிமன்றத்தில் நேரில் ஆஜரானார்.**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது பெல்ரம்பட்டி காலனியில் வசித்து, நான் தருமபுரி அரசு கலைக்கல்லூரியில் சமையலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.12.2024 தேதியன்று, மாலை 06.00 மணிக்கு, நான் மகளிர் இரண்டு விடுதிக்கும் இடையே உள்ள சாலையில் பின்பக்கமாக சென்று கொண்டிருந்தேன். எனக்கு முன்னால் விடுதி வார்டன் கனிமொழி நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது ஆட்டோ ஒன்று வேகமாக வந்து கனிமொழி மீது மோதி, அவருக்கு தலையிலும், உடலிலும் அடிப்பட்டுவிட்டது. பின்பு நானும், விடுதியில் இருந்த மாணவர்களும் சேர்ந்து தூக்கி அதே ஆட்டோவில் அவரை சிகிச்சைக்காக தருமபுரி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தோம். விபத்து தொடர்பாக அவர் மகள் ராகவிக்கு தகவல் தெரிவித்தோம். ஆட்டோவை ஆஜர் எதிரிதான் ஓட்டி வந்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :

நான் 6 வருடங்களாக சமையலராக விடுதியில் வேலை செய்து வருகிறேன். மூன்று வேலையும் நான்தான் விடுதியில் சமைப்பேன் என்றால் சரிதான். இரவு சமையலுக்கு நான் எப்போது செய்ய ஆரம்பிப்பேன் என்றால், மாலை 04.00 மணிக்கே ஆரம்பித்துவிடுவேன். சமையல் முடிப்பதற்கு இரவு 07.00 – 07.30 மணி ஆகிவிடும். எனவே, நாள் முழுவதும் மூன்று வேளைக்கும் சமைப்பதால், எனது முழு நேரமும் அங்குதான் செலவாகும் என்றால் சரிதான். விபத்து நடைபெற்றதாக கூறப்படும் தினத்தன்று, நான் எந்த சிப்டில் இருந்தேன் என்றால், நான் அங்கேயே தங்குவதும் விடுதியில்தான். வேலையை முடித்துவிட்டு, இரவு 08.00 மணிக்குத்தான் வெளியே வருவேன் என்றால் சரிதான். சமையல் அறையானது விடுதிக்கும், சாலைக்கும் பின்புறத்தில் உள்ளது என்றால் சரிதான். விபத்தில் இறந்து போனதாக கூறப்படும் நபருக்கு கண்ணாடி அணியும் பழக்கம் உள்ளது என்றால் சரிதான். எனவே அவர் கண்ணாடி அணியாமல் இருந்தால் அவருக்கு வழி சரிவர தெரியாது என்றால் சரியல்ல. அவர் எழுதும்போது மட்டுமே கண்ணாடியை பயன்படுத்துவார். விபத்து நடைபெற்றதாக கூறப்படும் தினத்தன்று மிகுந்த மழை பெய்தது என்றால் சரிதான். அந்த மழை காரணமாக விடுதியின் இருபக்க சாலையிலும் முழுங்கால் அளவிற்கு தண்ணீர் தேங்கி இருந்தது என்றால் சரிதான். விபத்து நடைபெற்றதாக கூறப்படும் சாலையில் இருபுறத்திலும் வேகத்தடை உள்ளது என்றால் சரியல்ல. மழை தண்ணீர் அதிகமாக தேங்கி இருப்பதால் , அதில் செல்லும் வாகனங்கள் வேகமாக செல்வதால், தண்ணீர் மற்றவர் மீது தெறிக்கும் வாய்ப்பு உள்ளது என்பதால், அதில் செல்லும் வாகனங்கள்

மெதுவாகத்தான் செல்லும் என்றால் சரிதான். நான் விபத்தின் போது விடுதியில் இருந்தேன் என்றும், அங்கிருந்த மாணவர்கள்தான் என்னை அழைத்ததன் பேரில்தான், நான் விடுதியில் இருந்து வெளியே வந்து பார்த்தேன் என்றால் சரியல்ல. நான் நேரில் பார்த்தேன். நான் கூறுவது தவறானது என்றும், இறந்தவர் விடுதி வார்டன் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்துபோன நபரின் மகளின் தொலைபேசி எண் என்னிடம் இருந்தது. நான்தான், அதனால் போன் செய்தேன். எனவே, நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும், இறந்த நபர் வார்டன் என்பதால், அவருக்கு இழப்பீடு பெற வேண்டி அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. தவறு.

<u>**மறுவிசாரணை**</u> : இல்லை

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்பு சாட்சி கையொப்பம் செய்தார்.**

MOHAMED RIZWANULLAH SHERIFF

Digitally signed by MOHAMED RIZWANULLAH SHERIFF
Date: 2026.08.05 14:30:42 +0530

**தலைமை குற்றவியல் நடுவர் நீதிபதி,**
**தருமபுரி.**

**சாட்சியின் கையொப்பம்.**

**DEPOSITION OF WITNESS**

**UNDER CODE OF CRIMINAL PROCEDURE**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, DHARMAPURI.**

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **CC. No: 499/2025** |
| **Ranking of witness** | **:** | **PW2** |
| **Name** | **:** | **ராகவி** |
| **Husband Name** | **:** | **க/பெ பிரகாஷ்** |
| **Age** | **:** | **34** |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Religion** | **:** | |
| **Calling** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 05-08-2026.**

**எதிரி நீதிமன்றத்தில் நேரில் ஆஜரானார்.**

**முதல் விசாரணை :**

நான் தற்போது தருமபுரியில் குடியிருந்து, அழகு நிலையம் வைத்து தொழில் செய்து வருகிறேன். கடந்த 30.11.2024 அன்று மாலை 06.00 மணிக்கு எனது அம்மா கனிமொழியை விடுதியில் இருந்து வீட்டிற்கு அழைத்து வருவதற்காக நான் பாதி வழியில் வந்து கொண்டிருந்தபோது, மாரம்மாள் என்பவர் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, எனது அம்மா விபத்தில் சிக்கிவிட்டதாக சொன்னார். உடனடியாக தருமபுரி அரசு கலைக்கல்லூரி முகப்பிற்கு சென்றுவிட்டேன். அந்த விபத்து நடைபெற்ற ஆட்டோவிலேயே அரசு மருத்துவமனை கொண்டு சென்றோம். பின்பு சேலம் மணிப்பால் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்று சேர்த்தபோது, அவரை பரிசோதித்த மருத்துவர்கள் இரவு 09.05 மணிக்கு இறந்துவிட்டதாக சொன்னார்கள். இதுதொடர்பாக அதியமான்கோட்டை காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தோம். பின்பு அங்கிருந்து வந்த போலீசார் எனது தாயார் பிரேதத்தை கைப்பற்றி, பிரேத பரிசோதனைக்காக தருமபுரி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று, பிரேத பரிசோதனை மற்றும் பிரேத விசாரணை மேற்கொண்டு, எனது தாயார் பிரேதத்தை என்னிடம் ஒப்படைத்தார்கள். விபத்து தொடர்பாக எனது தந்தை ராமச்சந்திரன் புகார் கொடுத்துள்ளார். அவருக்கு கடந்த 10 வருடங்களாக வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டு, அவர் பேச இயலாத நிலையில் இருந்து வருகிறார். நான் மருத்துவமனையில் இருந்த காரணத்தினால், என் தகப்பனார் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் விபத்தை நேரடியாக பார்க்காததால் யாருடைய கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் விபத்து நடைபெற்றது என்பது பற்றி என்னால் கூற முடியாது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை :** இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்பு சாட்சி கையொப்பம் செய்தார்.

MOHAMED RIZWANULLAH SHERIFF

Digitally signed by MOHAMED RIZWANULLAH SHERIFF
Date: 2026.08.05 14:30:52 +0530

**தலைமை குற்றவியல் நடுவர் நீதிபதி,**
**தருமபுரி.**

**சாட்சியின் கையொப்பம்.**